டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in
கல்யாண் வெல்லர்ஸ்
agridoctor.in | 24.11.2026 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 131 | Madurai | Online Edition

டெல்டா உள்ளிட்ட 9 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு!

சென்னை, நவ.23

தமிழகத்தில் மீண்டும் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்து உள்ளது. டெல்டா உள்ளிட்ட 9 மாவட்டங்களில் இன்று (நவ.24) கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் கடந்த ஒரு வாரமாக வறண்ட வானிலையும், பனிப் பொழிவும் நிலவி வந்தது. இந்நிலையில், நேற்று அதிகாலை முதல் சென்னை, புறநகர் பகுதிகள் மற்றும் தமிழக கடலோர மாவட்டங் களில் லேசான சாரல் மழையும், சில இடங்களில் மிதமான மழையும் பெய்து வருகிறது.

இந்நிலையில், சென்னை வானிலை மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தென்மேற்கு வங்கக் கடலில் ஒரு காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது மற்றும் வட கேரளாவில் இருந்து கர்நாடகா வரை கடலோரப் பகுதிகளுக்கு அப்பால் ஒரு காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக தமிழகத்தில் இன்று (நவ.24) கடலூர், தஞ்சை, திருவாரூர், மயிலாடுதுறை, நாகை, புதுக்கோட்டை, சிவகங்கை, ராமநாதபுரம், தூத்துக்குடி மாவட்டங்களில் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழையும், சென்னை, திருவள்ளூர், செங்கல் பட்டு, காஞ்சிபுரம் உள்ளிட்ட இதர 29 மாவட்டங்களில் இடி, மின்னல், பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும்.

நவ.25-ம் தேதி தஞ்சை, திருவாரூர், மயிலாடுதுறை, நாகை, புதுக்கோட்டை, சிவகங்கை, ராமநாதபுரம், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், தேனி, தென்காசி, தூத்துக்குடி, திருநெல்வேலி, குமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும், இதர மாவட்டங் களில் பெரும்பாலான இடங்களில், புதுச்சேரியிலும் மிதமான மழை பெய்யக்கூடும் என தெரிவித்துள்ளது.

விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் வேளாண் இயந்திரங்களுக்கான மானியத் திட்டங்கள் குறித்து மாணவர்கள் நேரில் அறிந்து கொண்டனர்!



சேலம், நவ.23

சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த வேளாண் மாணவர்கள் கலந்துகொண்டு, விவசாயிகளின் கோரிக்கைகள், வேளாண் அரசுத் திட்டங்கள் மற்றும் மானிய உதவிகள் குறித்து நேரடியாக அறிந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் வேளாண் இயந்திரங்கள் வாங்குவதற்கான அரசு மானியத் திட்டங்கள் மற்றும் அவற்றைப் பெறுவதற்கான நடைமுறைகள் குறித்து விளக்கப்பட்டன. வேளாண் இயந்திரங்களுக்கான பயனாளிகள் தேர்வு குலுக்கல் முறையில் (Lottery System) நடைபெறுவதாகவும், மாதத்தின் 1 முதல் 7 ஆம் தேதி வரையிலும், 15 முதல் 21 ஆம் தேதி வரையிலும் விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு குறுஞ்செய்தி மூலம் இயந்திர ஒதுக்கீடு குறித்த தகவல் தெரிவிக்கப்படும். தகவல் கிடைத்த ஐந்து நாட்களுக்குள் உரிய தொகையைச் செலுத்த வேண்டும். சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 50 சதவீத மானியம் வழங்கப்படுவதுடன், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு கூடுதல் 20 சதவீத மானிய உதவி வழங்கப்படுவதாகவும் எடுத்துரைக்கப்பட்டது. பெரிய விவசாயிகளுக்கான மானிய விகிதமும் தனியாக விளக்கப்பட்டது.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

மேலும், இயந்திரம் வாங்கியதற்கான ரசீதில் இயந்திர எண், எஞ்சின் எண் மற்றும் சேஸிஸ் எண் ஆகியவை கட்டாயம் இடம்பெற வேண்டும். மானியத்தில் பெறப்பட்ட இயந்திரத்தை நான்கு ஆண்டுகள் வரை விற்பனை செய்யக்கூடாது என்ற நிபந்தனையும் தெரிவிக்கப்பட்டது. இயந்திரங்கள் விவசாயி களின் வீடுகளுக்கே நேரடியாகக் கொண்டு சென்று வழங்கப் படும் நடைமுறையும் விளக்கப்பட்டது.

இதனுடன், வேளாண் ட்ரோன் பயன்பாடு, ட்ரோன் இயக்கு வதற்கான பயிற்சி மற்றும் உரிமம் பெறுதல் தொடர்பான வாய்ப்புகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது. ஆண்கள் மற்றும் பெண்கள் இருவருக்கும் ட்ரோன் இயக்கப் பயிற்சி வழங்குவதன் அவசியம் எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், விவசாயிகளின் தேவைகளில் ஒன்றாக ஒவ்வொரு வட்டாரத்திலும் இயற்கை மற்றும் அங்கக வேளாண்மைக்குத் தேவையான இடுபொருட்கள் எளிதில் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் கலந்துகொண்டதன் மூலம், விவசாயிகள் எதிர்கொள்ளும் நடைமுறைச் சிக்கல்கள், அரசு மானியத் திட்டங் களைப் பெறுவதற்கான வழிமுறைகள் மற்றும் வேளாண் துறையின் செயல்பாடுகள் குறித்து மாணவர்கள் நேரடி அனுப வத்தைப் பெற்றனர். வகுப்பறைக் கல்வியுடன் கள அனுபவத் தையும் இணைக்கும் இத்தகைய நிகழ்வுகள், எதிர்கால வேளாண் அலுவலர்களாகவும் தொழில்முனைவோர்களாகவும் உருவாகும் மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைகின்றன.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது அக்ரி டாக்டர் வாசகர் என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் காளான் வளர்ப்பு பயிற்சி!

கோயம்புத்தூர், நவ.23

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பயிர் நாயியல் துறையில் திறன் சார்ந்த மூன்று நாள் 'காளான் விதை உற்பத்தி மற்றும் காளான் வளர்ப்பு பயிற்சி 30.11.26 முதல் 02.12.26 வரை நடைபெற உள்ளது. பயிற்சி கட்டணம் ரூ.5,370/- (ரூபாய் ஐயாயிரத்து முந்நூற்று எழுபது மட்டும்) (வரி கட்டணம் உட்பட). பயிற்சிக்கு முன் பதிவு அவசியம். பயிற்சி கட்டணத்தை நேரடி யாகவோ / வங்கி பரிவர்த்தனை மூலமாகவோ செலுத்தலாம்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், பயிர் நோயியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர். தொலைபேசி : 0422-6611336, 6611226, அலை பேசி : 93618 89846, 63792 98064, 96294 96555, 63831 77619, மின்னஞ்சல் : pathology@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

நுண்கீரைகள் வளர்ப்பு பயிற்சி!



சேலம், நவ.23

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும், வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த நான்காம் ஆண்டு பயிலும் வேளாண் மாணவிகள், வேளாண்மை அறிவியல் நிலையம், சந்தியூரில், தங்கி இருந்து ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ். சேலம் மாவட்டம், சந்தியூர் கிராமத்தில் இருக்கும் வேளாண் அறிவியல் நிலையத்தில் நுண்கீரைகள் வளர்ப்பு குறித்து நடந்த பயிற்சியில் பங்கேற்றனர். இப்பயிற்சியில், நுண்ணிலைப் பயிர் வளர்ப்பின் முக்கியத்துவம், சாகுபடி முறைகள் மற்றும் அதன் பயன்கள் குறித்து வேளாண் மாணவர்கள் அறிந்து கொண்டனர். மேலும், இப்பயிற்சியில் சுமார் 80 விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். இந்நிகழ்வின் ஒரு பகுதியாக, வேளாண் மாணவர்கள் விவசாயிகளுக்கு நுண்ணிலைப் பயிர் வளர்ப்பு குறித்த செயல்விளக்கத்தையும் வழங்கினர். இதன் மூலம் நுண்ணிலைப் பயிர் வளர்ப்பு தொழில்நுட்பங்கள் குறித்த விழிப்புணர்வு விவசாயிகளிடையே ஏற்படுத்தப்பட்டது.

விதை உறக்கமும் அதனை தடுக்கும் வழிமுறைகளும்

திண்டுக்கல், நவ.23

விதை உறக்கம் என்பது விதை முளைப்பதற்கு சாதகமான சூழ்நிலை இருந்தும் விதைகள் முளைத்தலில் தாமதம் ஏற்படுதல் ஆகும். பொதுவாக விதையின் ஓய்வு நிலையையே விதை உறக்கம் என்கிறோம்.

விதை உறக்கம் பொதுவாக இரண்டு வகைப்படும்.

1. முதல் நிலை விதை உறக்கம்
2. இரண்டாம் நிலை விதை உறக்கம்

முதல் நிலை விதை உறக்கம்

செடியில் விதை முதிர்ச்சி அடைவதற்கு முன்பே விதை உறக்கம் தூண்டப்படும் நிகழ்வே முதல் நிலை விதை உறக்கம் எனப்படும். இது பொதுவாக இரண்டுகாரணிகளால் தூண்டப் படுகிறது.

வெளிபுறக் காரணிகள்

இது விதையின் கடினஉறை காரணமாக விதை உறக்கம் தூண்டப்படுதலை குறிக்கிறது. உதாரணமாக பயறுவகை பயிரான உளுந்தில் கடின விதை உறை காரணமாக நீர் உறிஞ்சுதல் தற்காலிகமாக தடுக்கப்பட்டு முளைப்புத்திறன் தாமதப்படுகிறது.

உட்புறக் காரணிகள்

இது விதையின் கரு நன்கு முதிர்ச்சி அடையாத காரணத் தினாலோ அல்லது விதைகளில் வளர்ச்சிதை மாற்ற செயல்பாடு தடைபடுவதால் முளைப்புத்திறன் தாமதப்படுதலை குறிக்கிறது. பொதுவாக எத்திலின், அப்சிசிக் அமிலம் போன்றவை இதில் முக்கிய பங்கு வகிக்கிறது. உதாரணமாக, கொத்தமல்லி விதை உறையில் உள்ள கௌமாரின் அமிலம் அதில் விதை உறக்கத்தை தூண்டுகிறது. சூரியகாந்தி விதை உறையில் உள்ள ஹைட்ரோசைனிக் அமிலம் மூலம் அதில் விதை உறக்கம் தூண்டப்படுகிறது. நெல் மற்றும் பருத்தி விதைகளில் அப்சிசிக் அமிலம் உருவாவதால் விதை உறக்கம் தூண்டப்படுகிறது.

இரண்டாம் நிலை விதை உறக்கம்

விதைகளுக்கு போதிய அளவு ஈரப்பதம், ஒளிச்செறிவு, வெப்பநிலை மற்றும் ஆக்சிஜன் கிடைக்காத காரணங்களால் விதை உறக்கம் தூண்டப்படுவது இரண்டாம் நிலை விதை உறக்கம் எனப்படும்.

விதை உறக்கத்தை தடுக்கும் வழிமுறைகள்

நன்கு முதிர்ச்சி பெற்ற விதைகளை விதைத்தலுக்கு பயன் படுத்த வேண்டும். அறுவடைக்கு பின்பு உடனடியாக விதை களை பயன்படுத்தாமல் சிறிது காலம் சேமித்து வைத்து பின்பு பயன்படுத்துவதால் விதை உறக்கத்தை தடுத்து முளைப்புத் திறனை அதிகரிக்கலாம்.

பாகல் விதைகளில் கடினமான விதை உறையின் காரணமாக விதை உறக்கம் ஏற்படுகிறது.இதனைதடுக்க 2:1 என்ற விகிதத்தில் மணலுடன் விதையை சேர்த்து 5 முதல் 10 நிமிடங்கள் உரசுவதால் விதை உறை மென்மையாகி முளைப்புத்திறன் தூண்டப்படுகிறது. இம்முறை ஸ்கார்பிகேன் என்று அழைக்கப்படுகிறது.

பருத்தியில் விதை உறக்கத்தை தடுத்து முளைப்புத்திறனை தூண்டுவதற்கு எத்திரல் போன்ற வளர்ச்சி ஊக்கிகளை பயன் படுத்தலாம். பருவத்திற்கு ஏற்றாற் போல் பயிர்களை தேர்வு செய்து விதைக்கும் பொழுது விதை உறக்கம் களையப்பட்டு முளைப்புத்திறன் தூண்டப்படுகிறது.

எனவே, விதையின் தரத்தை அறிந்து விதைப்பதன் மூலம் முளைப்புத்திறனை அதிகரித்து அதிக மகசூல் ஈட்டலாம். விதையின் தரத்தை அறிந்து கொள்ள திண்டுக்கல் உழவர் மைய வளாகத்தில் உள்ள விதைப்பரிசோதனை நிலையத்தில் விதை மாதிரி ஒன்றிற்கு ரூ.80/- கட்டணமாக செலுத்தி பரிசோதனை முடிவுகளை பெறலாம்.

இவ்வாறு விதைப் பரிசோதனை அலுவலர் சி.சிவகாமி மற்றும் வேளாண்மை அலுவலர்கள் ப.பிரபாகரன் மற்றும் ம.ஜமுனா ராணி தெரிவித்துள்ளனர்.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

கால்நடை மருத்துவத்தில் வசம்பின் பயன்பாடு



ஆயர்வேத மருத்துவத்தில் 100 வருடங் களாக வசம்பு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இது புல் வகையை சேர்ந்த அரை நீர்வாழ் அல்லது சதுப்புநில மூலகையாகும். நீர் நிறைந்த குளம், ஆறு மற்றும் சேர் நிறைந்த பகுதிகளில் வளரும். இவை ஊர்ந்து வளரும் தண்டுகளைக்கொண்ட ஒரு நறுமண மூலிகையாகும். இதில் உள்ள அத்தியாவாசிய எண்ணெய்களால் இது இனிமையான இதமான நறுமணத்தைக் கொடுக்கும். 'ரெட் டேட்டா புக்' படி வசம்பு தாவரம் அருகி வரும் இனங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. அத்தாவரம் இந்தியாவை பூர்வீகமாக கொண்டது. காஷ்மீர், மணிப்பூர் மற்றும் நாகாலாந்து ஆகிய மாநிலங்களின் சதுப்பு நிலப் பகுதிகளில் வளர்கிறது. இந்தியாவில் இரண்டு இனங்கள் இருப்பதாக அறியப்படுகிறது. அகோரஸ் கலாமஸ் லின் மற்றும் அகோரஸ் கிராமனியஸ். இத்தாவரம் 80 செ.மீ உயரம் வளரக் கூடியது. வேர்தண்டு வலுவான நறுமணம் கொண்டது. இவை தடித்த, 1–3 செ.மீ அகலமுள்ள, நார் போன்ற வேர்களைக் கொண்ட வேர்த்தண்டாகும்.

வசம்பு தாவரவியல் பெயர் : அகோரஸ் கலாமஸ்

ஆங்கிலப் பெயர் : sweet flag

பயன்படும் பகுதி : வேர்த்தண்டு

செயல்படும் வேதிப்பொருட்கள் : ஆல்பா அரோன், பீட்டா அரோன் ஈகியூனால் மற்றும் அகோரினோன்

வசம்பின் மருத்துவப் பயன்கள்

அஜீரணம் மற்றும் வயிற்று உப்பசத்திற்குப் பயன்படுகிறது. வயிற்றில் வாயு சேர்வதைக் குறைக்கப் பயன்படுத்தப்படுகிறது. பசியைத் தூண்டும் மூலிகையாகக் கருதப்படுகிறது. வயிற்று வலிக்கு பாரம்பரிய மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகிறது. செரிமாண செயல்பாட்டை மேம்படுத்தும் நோக்கில் பராம்பரியமாகப் பயன்படுத்தப்படுகிறது.

சில பாக்டீரிய மற்றும் பூஞ்சைகளுக்கு எதிரான செயல்பாடு ஆய்வக ஆய்வுகளில் காணப்பட்டுள்ளது. அழற்சியைக் குறைக்கும் தன்மை கொண்டது. குடற்புழுக்களுக்கு எதிரான செயல்பாடு குறித்து ஆய்வுகள் உள்ளன.

கால்நடைகளின் உடலின் வெளிப்புறத்தில் வாழ்ந்து இரத்தம் அல்லது திசுக்களைச் சார்ந்து வாழும் ஒட்டுண்ணிகள், பேன்கள், சொறிப் பூச்சி, தெள்ளுப் பூச்சி ஆகியவற்றால் ஏற்படும் இரத்த சோகை, தோல் பாதிப்பு, அரிப்பு, முடியுதிர்தல், தோல் அழற்சி மற்றும் தோல் எரிச்சல் ஆகியவற்றை கட்டபடுத்த வசம்பை பயன் படுத்தலாம்.

மேலும் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர் நடத்திய ஆய்வில் வசம்பின் இலை தூள் மற்றும் வேர்த்தண்டு தூள் நீரில் கலந்து தெளித்ததில், பயிரின் பூச்சிகள், தாவர பேன்கள் மற்றும் வண்டுகளை விரட்டியதாக தெரியப்படு கிறது. ஈக்கள் மற்றும் பேன்களுக்கும் உகந்ததாக அமைகிறது. வேர் தண்டின் சாரானது முதிர்ந்த ஈக்களுக்கு எதிராக பூச்சி கொல்லி பண்புகளை வெளிப்படுத்துகின்றன. மேலும் வசம்பு கால்நடை களின் மீது உள்ள பூச்சிகளை விரட்டும் சாத்தியம் கொண்டவை. சில பூச்சிகளைக் கொல்லும் தன்மை கொண்டவை. ஓட்டுண்ணி மற்றும் சொறி பூச்சிகளுக்கு எதிரான செயல்களைக் கொண்டவை. பூச்சிகளின் இளம் நிலையைப் பாதிக்கும் திறன் கொண்டவை.

வசம்பில் உள்ள பீட்டா அசோரேன் எனும் வேதிப்பொருள் காரணமாக நச்சுத்தன்மை மற்றும் புற்றுநோய் அபாயம் ஏற்படும் என ஆய்வுகள் உள்ளன.

தகவல் : ***முனைவர் மா.வெங்கடேசன், அ.அபிநயஸ்ரீ, ச.அனு வைஷ்ணவி, ப.அர்ச்சனா மற்றும் முனைவர் சு.சிவராமன், கால்நடை சிகிச்சை வளாகம், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், சேலம் – 636 112.***

தலைக் கவசம் உயிர்க் கவசம்



மண்புழு உரம் தயாரிப்பு குறித்து விவசாயிகளுக்கு செயல்விளக்கமளித்த வேளாண்மைக் கல்லூரி மாணவிகள்

நாமக்கல், நவ.23

நாமக்கல் மாவட்டம், பரமத்தி கிராமத்தில் ஊரக வேளாண் பணியனுபவத் திட்டத்தின் (RAWE – Rural Agricultural Work Experience) கீழ், பெரம்பலூர் மாவட்டம் தனலட்சுமி சீனிவாசன் வேளாண்மைக் கல்லூரியைச் சேர்ந்த இறுதியாண்டு வேளாண்மை மாணவிகள் எட்டு பேர், (கோபிகா, ஞான ஸ்ரீ, கோகுலப் பிரியா, குருசந்திர பிரபா, ஹபிபா, ஜெயஸ்ரீ, ஹேமலதா, ஜெர்லின் ஜிது) விவசாயிகளுக்கு மண்புழு உரம் தயாரிப்பு குறித்த விழிப்புணர்வு மற்றும் செயல் விளக்க நிகழ்ச்சியை நடத்தினர்.



இந்நிகழ்ச்சியில், விவசாயக் கழிவுகள் மற்றும் கால்நடைக் கழிவுகளைப் பயன்படுத்தி மண்புழு உரம் தயாரிக்கும் முறைகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது. மண்புழு உரம் தயாரிப்பதற்குத் தேவையான மூலப்பொருட்கள், உரப் படுக்கை அமைக்கும் முறை, மண்புழுக்களின் பங்கு, உரம் தயாராகும் காலம் மற்றும் உரத்தைப் பிரித்தெடுக்கும் முறைகள் குறித்து மாணவிகள் செயல்விளக்கத்துடன் எடுத்துரைத்தனர்.

மேலும், மண்புழு உரத்தைப் பயன்படுத்துவதால் மண்ணின் வளம் அதிகரித்தல், மண்ணின் நுண்ணுயிர் செயல்பாடு மேம்படுதல், பயிர்களின் வளர்ச்சி அதிகரித்தல் மற்றும் ரசாயன உரங்களின் பயன்பாட்டைக் குறைத்தல் போன்ற நன்மைகள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.

விவசாயக் கழிவுகளை வீணாக்காமல் அவற்றை இயற்கை உரமாக மாற்றிப் பயன்படுத்துவதன் மூலம் குறைந்த செலவில்

நிலையான வேளாண்மையை மேற்கொள்ள முடியும் என்பதை மாணவிகள் விளக்கினர்.

இந்நிகழ்ச்சியில் விவசாயிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு மண்புழு உரம் தயாரிப்பு தொடர்பான தகவல்களைக் கேட்டறிந்தனர்.

இந்நிகழ்ச்சி விவசாயிகளிடையே இயற்கை உரப் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்கும், சுற்றுச்சூழலுக்கு உகந்த வேளாண்மை முறைகளைப் பின்பற்றுவதற்கும் பயனுள்ளதாக அமைந்தது.



சொக்கப்பனை தீபத்திருநாளில் கொளுத்துவதில் உள்ள ஆன்மீகம் கலந்த அறிவியல் - தெரியுமா?



சொக்கப்பனை என்பது கார்த்திகை தீபத்திருநாளின் (இன்று) போது கோவில் களின் முன்பாகவோ அல்லது பொது வான இடங்களில் பனை ஓலையைக் கொண்டு கூம்பு வடிவில் அமைத்து தீபம் ஏற்றி வழிபடுவது நம்முடைய தமிழர் களின் பாரம்பரிய நிகழ்வாகும்.

ஒரு சில இடங்களில் திருக்கார்த்திகை தீபதிருநாளில் ஆரம்பித்து 2 தினங்கள் சொக்கப்பனை கொளுத்துவது இன்னும் கிராமப்புறங்களில் தொடர்கிறது. இதில் ஆன்மீகம் கலந்த அறிவியல் நடைமுறை மற்றும் சுற்றுப்புற சூழலியல் கேற்ற கோணத்தில் முன்வைக்கப்படும் விளக்கங்களாகும்.

சொக்கபனையில் உள்ள ஆன்மீகம் என்ன?

மதுரையை ஆண்ட சொக்கநாத பெருமானின் பெயரில் (சொக்கர் பனை) என்று அழைக்கபட்டதை மருவி சொக்க பானை என்று அழைக்கப்படுகின்றது.

சிவபெருமான் அடிமுடி காணாத ஜோதி பிழம்பாக நின்றதை குறிக்கும் வகையில் சொக்கப்பனை கொளுத்தப்படுகிறது.

சொக்கப்பனை எரிப்பதில் உள்ள அறிவியல் என்ன?

1) ஈரப்பதம் மற்றும் குளிர் மழைக்கால தொடக்கம்

பொதுவாக கார்த்திகை மாதம் கன மழை ஐப்பசி மாதம் அடை மழை என்பார்கள் (தற்போது மழை இல்லை, எல்நினோ பாதிப்பால்) வடகிழக்கு பருவ மழை காலத்தில் சொக்கப்பனை தீயிட்டு எரிப்பதால் சுற்றுப்புறத்தில் ஈரப்பதத்தை குறைத்து, தற்காலிக வெப்ப நிலையை கதகதப்பான நிலையை உருவாக்கும்.

2) பூச்சி கட்டுபாடு (PHOTO TAXIS)

இந்த காலத்தில் சாகுபடி காலமாகும். சாகுபடி செய்யப்பட்டு உள்ள பயிர்களின் தாய் அந்துபூச்சியை கவரக்கூடிய சொக்கப்பனை தீபிழம்பில் வந்து விழ்ந்து அழிந்து விடுகின்றன. இதனால் பூச்சிகளின் இனப்பெருக்கம் கட்டுப்படும் (தற்போதைய ஒருங்கிணந்த பயிர் பாதுகாப்பு முறையில் முக்கிய அம்சமாக விளக்கு பொறி (LIGHT TROPS) உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் பூச்சிகள் மற்றும் கொசுக்களை சொக்கப்பனை எரிப்பதால் உண்டாகும் புகையால், வெப்பத்தால் அழிக்கப்படுகின்றன.

3) பனை ஓலையின் பயன்பாடு

பனை மரங்கள் தமிழகத்தின் மாநில மரமாகும். அந்த காலத்துல பனை இல்லாத கிராமமே கிடையாது. பனை ஓலைகள் எளிதில் தீப்பிடிக்க கூடிய இயற்கையான எரிபொருள். எரிந்த முடிந்த பிறகு சாம்பல் மற்றும் கரி பயிர்களின் வளர்ச்சிக்கு பயன்படுகிறது. இது பாரம்பரிய மருத்துவ பொருளாக பயன்படுத்தபடுகிறது.

இப்போதாவது சொக்கப்பனை கொளுத்துவதன் தார்மீகத்தை தெரிந்து கொண்டீர்களா!

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



மங்களத்துபட்டி கிராமத்தில் விவசாய அடையாள எண் பதிவு சிறப்பு முகாம்!

புதுக்கோட்டை, நவ.23

புதுக்கோட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) ஆ.அபிநயா வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ள தாவது,

புதுக்கோட்டை வட்டாரம், மங்களத்துப்பட்டி கிராமத்தில், வருகின்ற 24.11.26 அன்று கிராம நிர்வாக அலுவலர் கட்டிடத்தில் விவசாய அடையாள எண் பதிவு சிறப்பு முகாம் நடைபெற உள்ளது.

விவசாய அடையாள எண் பதிவு செய்யாத விவசாயிகள் இந்த முகாமில் கலந்து கொண்டு தங்களது ஆதார் எண்ணுடன் நில விவரங்களை இணைத்து விவசாய அடையாள எண்ணை பதிவு செய்திடவும், ஏற்கனவே பதிவு செய்த விவசாயிகள் தங்களது அனைத்து நில உட்பிரிவு எண்களையும் இணைக்க கேட்டு கொள்ளப்படுகிறது எனவும், விவசாய அடையாள எண் பதிவு செய்தால் மட்டுமே மத்திய மற்றும் மாநில அரசின் பல்வேறு வேளாண் நலத்திட்டங்கள், மானியங்கள், பயிர் காப்பீடு மற்றும் பாரத பிரதமரின் விவசாயிகள் கௌரவ ஊக்கத்தொகை நிதி திட்டத்தன் கீழ் தவணைத் தொகைகள் தொடர்ந்து பெற இயலும். மேலும் அனைத்து நில உட்பிரிவுகளையும் இணைத்தால் மட்டுமே தங்களுக்கு தகுதியான அளவு உரங்கள், உர விற்பனை நிலையங்களிலிருந்து பெற இயலும்.

மேலும், கூட்டு பட்டா உள்ள விவசாயிகளும் சரியான ஆவணங்களுடன் இந்த முகாமில் கலந்து கொண்டு பயன் பெறலாம். விவசாய அடையாள எண் பதிவு செய்வதற்கு தேவையான ஆவணங்கள் ஆதார் எண், கணிணி சிட்டா, ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட கைப்பேசி எண்ணுடனும் பதிவு செய்ய தவறிய விவசாயிகள் இம்முகாமில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு அதில் தெரிவித்துள்ளார்.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
  பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள்
  கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE -	ASTM UPVC PIPE -	ISI CONDUIT PIPE -	ISI PLUMBING PIPE -	ISI BOREWELL CASING PIPE -
20mm to 250mm (All Classes)	21mm to 114mm (SCH 40, SCH80)	16mm to 63mm (Light, Medium, Heavy)	25mm to 50mm (15KG)	125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

மாணவர்களுக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நீர் மேலாண்மை மற்றும் கழிவு மேலாண்மை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தி வேளாண் கல்லூரி மாணவர்கள்



மதுரை, நவ.23

காரைக்குடியில் அமைந்துள்ள சேது பாஸ்கரா வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் 4ம் ஆண்டு வேளாண் மாணவர்கள், ஊரக வேளாண்மைப் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக, மதுரை மாவட்டம், மேலூர், ஜெயராஜ் அன்னபாக்கியம் சி.எஸ்.ஐ. உயர்நிலைப் பள்ளியில் மாணவர்களுக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் வளங்காப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தினர்.

இந்நிகழ்ச்சியில் நான்காம் ஆண்டு வேளாண் மாணவர்களான தவமுகுந்தன், சிவா, இதய எல்சன், பிரதீப்குமார், காமேஸ்வர் மற்றும் கோடீஸ்வர் ஆகியோர் பங்கேற்று மாணவர்களுக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பின் அவசியம், இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் வழிமுறைகள் மற்றும் அன்றாட வாழ்வில் பின்பற்ற வேண்டிய சுற்றுச்சூழலுக்கு உகந்த நடைமுறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இந்நிகழ்ச்சியின் முக்கிய நோக்கம், மாணவர்களிடையே சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், இயற்கை வளங்களைப் பாதுகாத்து தூய்மையான மற்றும் ஆரோக்கியமான சுற்றுச்சூழலை உருவாக்குவதில் ஒவ்வொருவருக்கும் உள்ள பொறுப்பை உணர்த்துவதாகும்.

முதலில், காற்று மற்றும் ஒலி மாசுபாட்டினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து மாணவர்களுக்கு விளக்கப்பட்டது. குப்பைகள் மற்றும் நெகிழிப் பொருட்களை திறந்தவெளியில் எரிப்பதைத் தவிர்த்தல், தேவையற்ற வாகன ஒலிப்பான்களின் பயன்பாட்டைக் குறைத்தல், அதிக ஒலி எழுப்பும் ஒலிபெருக்கிகளைத் தவிர்த்தல் மற்றும் அதிக அளவில் மரங்களை வளர்த்தல் போன்ற வழிமுறைகள் எடுத்துரைக்கப்பட்டன.

தொடர்ந்து, முறையான கழிவு மேலாண்மையின் முக்கியத்துவம் குறித்து விளக்கப்பட்டது. குறிப்பாக, கழிவுகளைக் குறைத்தல் (Reduce), மீண்டும் பயன்படுத்துதல் (Reuse), மறுசுழற்சி செய்தல் (Recycle) ஆகிய மூன்று முக்கிய கொள்கைகளை உள்ளடக்கிய 3யூ முறையின் அவசியம் எடுத்துரைக்கப்பட்டது. மேலும், மக்கும் குப்பை, மக்காத குப்பை மற்றும் அபாயகரமான கழிவுகளைத் தனித்தனியாகப் பிரித்து சேகரித்தல், சமையலறைக் கழிவு களிலிருந்து இயற்கை உரம் தயாரித்தல் மற்றும் ஒருமுறை மட்டுமே பயன்படுத்தப்படும் நெகிழிப் பொருட்களைத் தவிர்த்தல் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

நீர் வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல் மற்றும் நீர் வீணாவதைத் தடுப்பதன் அவசியம் குறித்து மாணவர்களுக்கு விளக்கப்பட்டது. மழைநீர் சேகரிப்பு முறையைப் பின்பற்றுதல், வீடுகள் மற்றும் விவசாய நிலங்களில் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல், குளங்கள், ஏரிகள் மற்றும் ஆறுகள் போன்ற இயற்கை நீர்நிலைகளை மாசுபடாமல் பாதுகாத்தல் ஆகியவற்றின் முக்கியத்துவம் எடுத்துரைக்கப்பட்டது.

சுற்றுச்சூழல் சமநிலையைப் பேணுவதில் மரங்களின் முக்கியத்துவம் குறித்து விளக்கப்பட்டது. அதிக அளவில் மரக்கன்று களை நட்டு வளர்த்தல், ஏற்கனவே உள்ள மரங்களைப் பாதுகாத்தல், பல்லுயிர்ப் பெருக்கத்தைப் பாதுகாத்தல் மற்றும் பறவைகள் உள்ளிட்ட உயிரினங்களின் வாழிடங்களைப் பாது காத்தல் போன்ற செயல்பாடுகளின் அவசியம் வலியுறுத்தப்பட்டது. மேலும், காடுகள் மற்றும் பசுமைப் பகுதிகளைப் பாதுகாப்பதன் மூலம் இயற்கைச் சூழலை மேம்படுத்த முடியும் என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பின் நன்மைகள்

சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதன் மூலம் தூய்மையான காற்று, பாதுகாப்பான குடிநீர், ஆரோக்கியமான வாழ்க்கை, இயற்கை வளங்களின் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் சமநிலை போன்ற பல்வேறு நன்மைகள் கிடைப்பது குறித்து மாணவர்களுக்கு விளக்கப்பட்டது. எதிர்காலத் தலைமுறையினருக்காக இயற்கை வளங்களைப் பாதுகாத்து வழங்க வேண்டியதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சி மாணவர்கள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில்

விழிப்புணர்வு விளக்கப்படத்தின் உதவியுடன் நடத்தப்பட்டது. மேலும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது அரசாங்கத்தின் பொறுப்பு மட்டுமல்லாமல், ஒவ்வொரு தனிமனிதரின் கடமையும் ஆகும் என்பதையும் மாணவர்களுக்கு எடுத்துரைத்தனர்.

இவ்விழிப்புணர்வு நிகழ்ச்சியின் மூலம் மாணவர்களிடையே சுற்றுச்சூழல் பாதுகாப்பு, கழிவு மேலாண்மை, நீர் வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் மரங்களை வளர்த்தல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. சிறு வயதிலிருந்தே சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த பொறுப்புணர்வை மாணவர்களிடம் வளர்க்கும் பயனுள்ள நிகழ்ச்சியாக இது அமைந்தது.



பழங்குடியினர் நலத்திட்டத்தில் மக்காச்சோள சாகுபடி பயிற்சி

திருப்பூர், நவ.23

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், வாகரை மக்காச்சோள ஆராய்ச்சி நிலையம் சார்பாக திருப்பூர் மாவட்டம், மானுப்பட்டி கிராமம் பொறுப்பாறு பழங்குடியின விவசாயி களுக்கு இந்திய மக்காச்சோள ஆராய்ச்சி நிறுவனம் லூதியான நிதி உதவியுடன் 19.11.26 அன்று வீரிய ஒட்டுரக மக்காச்சோள





சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி வழங்கப்பட்டது. மேற்கண்ட பயிற்சிகளை மக்காச்சோள ஆராய்ச்சி நிலைய தலைவர் முனைவர் தங்க ஹேமாவதி, பேராசிரியர் மற்றும் தலைவர் தலைமை தாங்கி தொடங்கி வைத்து பேசுகையில், மக்காச்சோள பயிரின் முக்கியத்தும் மற்றும் பொருளாதார பயன்கள் குறித்து விளக்கிக் கூறினார். திட்ட பொறுப்பாளர்கள் பேராசிரியர்கள் முனைவர் துக்கையண்ணன் மற்றும் முனைவர் சத்தியசீலா ஆகியோர் வீரி ஒட்டு இரச மக்காச் சோள விதை உற்பத்தி, பதியு ஒட்டு ரகங்கள் மற்றும் சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்து விளக்கம் அளித்தனர்.

இப்பயிற்சியினை வேளாண்மை மேற்பார்வையாளர் மணிகண்ட ராஜன் ஒருங்கிணைத்தார். திட்டத்தால் பெற்ற பயன்கள் மற்றும் தேவைகளை பழங்குடியின தலைவர் கன்னியப்பன் கூறினார். இப்பயிற்சியில் பொறுப்பாறு மற்றும் ஆட்டுமலை பழங்குடியின விவசாயிகள் சுமார் 50 பேர் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

இப்கோ விவசாயிகள் கருத்தரங்கம்



தஞ்சாவூர், நவ.23 தஞ்சாவூர் மாவட்டம், பூண்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் விவசாயிகள் கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் பங்கேற்ற இப்கோ கள அலுவலர் மாரியப்பன், நெல் சாகுபடியில் சமச்சீர் உர மேலாண்மையின் முக்கியத்துவம் குறித்தும், இப்கோவின் நானோ உரங்களான நானோ டி.ஏ.பி., நானோ யூரியா, நானோ ஜிங்க், நானோ காப்பர், சாகரிகா மற்றும் உயிர் உரங்களின் பயன்பாடுகள், அவற்றின் நன்மைகள் மற்றும் பயன்படுத்தும் முறைகள் குறித்தும் விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார். மேலும், சங்கட ஹரன் பீமா யோஜனா திட்டம், அரசின் பல்வேறு நலத்திட்டங்கள், பயிர்க் காப்பீட்டுத் திட்டம்மற்றும் கூட்டுறவுக் கடன் திட்டங்கள் குறித்தும் விளக்கமளித்து, விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

பங்கேற்பு கிராமப்புற மதிப்பீட்டுத் திட்டத்தில் வேளாண் கல்லூரி மாணவர்கள்



சேலம், நவ.23

சேலம் மாவட்டம், வீரபாண்டி வட்டாரத்தில், பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் வேளாண்மைக் கல்லூரி மாணவர்கள், கிராமப்புற மதிப்பீடு (Participatory Rural Appraisal – PRA) நிகழ்ச்சி நடத்தினர். இந்நிகழ்ச்சியில் மாணவர்கள் கிராம மக்களுடன் நேரடியாகக் கலந்துரையாடி, அவர்களின் வாழ்வாதாரம், வேளாண்மை நிலை, இயற்கை வளங்கள், அடிப்படை வசதிகள் மற்றும் கிராமத்தின் முக்கியப் பிரச்சினைகள் குறித்து தகவல்களைச் சேகரித்தனர்.

இத்திட்டத்தில் கிராம மக்கள் ஆர்வத்துடன் பங்கேற்று, தங்கள் கிராமத்தின் தற்போதைய நிலை, வளங்கள் மற்றும் வாழ்வாதார வாய்ப்புகள் குறித்த தகவல்களைப் பகிர்ந்து கொண்டனர். இதன் ஒரு பகுதியாக, வண்ணக் கோலப்பொடிகளைப் பயன்படுத்தி சமூக வரைபடம் (Social Map), வள வரைபடம் (Resource Map), பட்டை வரைபடம் (Bar Diagram), செல்வநிலை வகைப்பாடு (Wealth Ranking), வென் வரைபடம் (ven Diagram), பயிர் வரிசை வரைபடம் (Crop Pyramid) உள்ளிட்ட 12 வகையான வரைபடங்கள் மற்றும் விளக்கப் படங்கள் உருவாக்கப்பட்டன.

மேலும், வீரபாண்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் (ADA) கார்த்திகாயினி மற்றும் வேளாண்மை அலுவலர் (AO) நிவேதா ஸ்ரீ ஆகியோர் PRA நிகழ்விடத்திற்கு வருகை தந்து, மாணவர்கள் தயாரித்த வரைபடங்கள் மற்றும் சேகரிக்கப்பட்ட தகவல்களை ஆய்வு செய்து, மாணவர்களின் களப்பணியைப் பாராட்டி, தேவையான வழிகாட்டுதல்களை வழங்கினர்.

இந்தக் களப்பயிற்சியின் மூலம் மாணவர்கள் கிராமப்புற மக்களின் வாழ்க்கைமுறை, சமூகப் பொருளாதாரச் சூழல் மற்றும் வேளாண் சார்ந்த சவால்களை நேரடியாக அறிந்துகொண்டதுடன், கிராம வளர்ச்சியில் மக்களின் பங்களிப்பின் முக்கியத்துவத்தையும் உணர்ந்தனர்.

மல்லிகையில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை பயிற்சி

மதுரை, நவ.23



மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் வட்டாரம், பெரியகூடக்கோயில் கிராமத்தில் மல்லிகையில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை பற்றிய பயிற்சி நடைப்பெற்றது. இப்பயிற்சியில் தலைமையேற்று கலந்து கொண்டு பேசிய வேளாண்மை அறிவியல் நிலைய மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் கி.சுரேஷ் பேசுகையில் மல்லிகையை தாக்கக்கூடிய முக்கிய பூச்சிகளான மொக்குப்புழு, இலைச் சுருட்டுப்புழு, பூப்பேன், மிட்ஜெஸ் மற்றும் நுண் சிலந்தி ஆகியவற்றின் வாழ்க்கை சரிதம், பூச்சி தாக்குதல் அறிகுறிகள் மற்றும் கட்டுப்படுத்தும் முறைகள் பற்றி எடுத்துரைத்தார். மேலும் அவர் குறிப்பிடுகையில் மொக்குப்புழுவை கட்டுப்படுத்த நல்ல பூக்களை எடுக்கும்போது மொக்குப்புழு தாக்கப்பட்ட பூக்களையும் எடுத்து அழிக்கவேண்டும். வருடத்திற்கு ஒருமுறை நூறு கிலோ வேப்பம்புண்ணாக்கை எருவுடன் கலந்து செடிக்குச்செடி இடுவதன்மூலம் நூற்புழு மற்றும் மொக்குப்புழுவின் தாக்குதலை வெகுவாக குறைக்கலாம். மொக்குப்புழுவின் தாக்குதல் அதிகமாக இருக்கும்பொழுது எமாமெக்ட்டின் பென்சோயேட் 0.4 கி / லிட்டர் அல்லது குளோரான்ட்ரானிலிப்ரோல் 0.4 மில்லி/ லிட்டர் ஏதேனும் ஒன்றை கலந்து தெளிக்கவும்.

திருப்பரங்குன்றம் தோட்டக்கலை உதவி இயக்குனர் திவ்யா கூறுகையில் மல்லிகைப்பூ உற்பத்தி குறைவாக உள்ள நவம்பர், டிசம்பர், ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் பூக்களின் உற்பத்தியை அதிகரிக்க செப்டம்பர் மாதத்தில் மல்லிகை செடியினை கவாத்து செய்து, நீர் பாய்ச்சி, உரமிடுதல் மூலம் மல்லிகைப்பூ உற்பத்தியை அதிகரிக்கலாம் என்றார். மேலும் பயிற்சியில் கலந்து கொண்டு பேசிய மதுரை கிழக்கு வட்டார உதவி தோட்டக்கலை இயக்குனர் மா.கார்த்தி ப்ரியா, தோட்டக்கலை துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றியும் அவற்றை பெறுவதற்கான வழிமுறைகள் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். தோட்டக்கலை அலுவலர் தன்ராஜ் நன்றி கூறினர். பயிற்சியில் 45 விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
  பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள்
  கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE -	ASTM UPVC PIPE -	ISI CONDUIT PIPE -	ISI PLUMBING PIPE -	ISI BOREWELL CASING PIPE -
20mm to 250mm (All Classes)	21mm to 114mm (SCH 40, SCH80)	16mm to 63mm (Light, Medium, Heavy)	25mm to 50mm (15KG)	125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

தென்னை விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த செய்முறை விளக்கமளித்த மாணவர்கள்



தஞ்சாவூர், நவ.23

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை வட்டாரம் வேப்பங்குளம் கிராமத்தில், கிராமப்புற தோட்டக்கலைப் பணியனுபவம் திட்டத்தின் கீழ், திருச்சிராப்பள்ளி மகளிர் தோட்டக்கலை மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த மாணவிகள், பி.ர.தர்ஷினி, மு.செ.முபிதா, ஆ.ப்ரீத்தி, கா.பிரியதர்ஷினி, ரா.ரகசியா, பா.சக்திமதி, தேவிகா சந்தோஷ், கங்கா, லூனா பதக். தென்னை விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த செய்முறை விளக்கம் அளித்தனர் மற்றும் இதில் பட்டுக்கோட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவர்களும் கலந்து கொண்டனர்.

இதில், தென்னை மரத்திற்கு வேர் டானிக் கொடுக்கும் முறைகள் மற்றும் தஞ்சாவூர் வாடல் நோய் குறித்து விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

தென்னை மரத்திற்கு வேர் டானிக் கொடுக்கும் முறை

பயன்படுத்தும் முறை

ஒரு லிட்டர் TNAU டாணிக்கை 4 லிட்டர் நீரில் கலந்து 5 லிட்டர் டானிக் தயாரித்து அதிலிருந்து ஒரு மரத்திற்கு 200 மிலி வீதம் 25 மாரத்திற்கு வேர் மூலம் கொடுக்க வேண்டும். ஒரு வருடத்திற்கு 200 மி.லி டானிக்கை 6 மாத இடைவெளியில் வேர் மூலம் கொடுக்க வேண்டும்.

பலன்கள்

பாளைகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். குரும்பை கொட்டுதல் குறையும். விளைச்சல் 20 சதம் வரை அதிகரிக்கும். பூச்சி மற்றும் நோய் எதிர்ப்பு திறன் கூடும்.

டானிக் கொடுக்கும் முறை

குழி தோண்டுதல் : தென்னை மரத்தின் அடிப்பகுதியிலிருந்து 1.5 முதல் 2 அடி (45-60 செ.மீ) தள்ளி ஒரு சிறிய குழி தோண்டவும்.

வேரைத் தேர்ந்தெடுத்தல் : மஞ்சள்-வெள்ளை அல்லது சிவப்பு-இளஞ்சிவப்பு நிறத்தில், பென்சில் தடிமன் கொண்ட ஆரோக்கிய மான வேரைத் தேர்ந்தெடுக்கவும்.

வேரை வெட்டுதல் : கூர்மையான கத்தியால் அந்த வேரின் நுனியைச் சாய்வாக வெட்டவும்.

டானிக் பையில் வைத்தல் : ஒரு சிறிய பாலிதீன் பையில் 200 மி.லி தென்னை டானிக் கரைசலை ஊற்றி, வெட்டிய வேரின் நுனியை அதில் மூழ்கும்படி வைக்கவும்.

நூலால் கட்டுதல் : கரைசல் கசியாமலும், வேர் நழுவாமலும் இருக்க பாலிதீன் பையின் வாய்ப்பகுதியை வேருடன் சேர்த்து நூலால் இறுக்கமாக கட்டவும்.

தஞ்சாவூர் வாடல் நோய்

1% போர்டோ கலவை தயாரிப்பு மற்றும் வேர்ப்பகுதியில் ஊற்றும் செயல்முறை

தென்னை வாடல் நோயைக் (தஞ்சாவூர் வாடல் நோய்) கட்டுப் படுத்த 1% போர்டோ கலவையைத் தயாரித்து மரத்தின் வேர்ப் பகுதியில் ஊற்றுவது சிறந்த தீர்வாகும்.

கலவை தயாரிக்கும் முறை : 1 கிலோ மயில் துத்தம் (காப்பர் சல்பேட்) மற்றும் 1 கிலோ சுட்ட சுண்ணாம்பு ஆகியவற்றைத் தனித் தனியாக தலா 50 லிட்டர் தண்ணீரில் கரைத்துக் கொள்ள வேண்டும். பின்னர், மயில் துத்தக் கரைசலை சுண்ணாம்புக் கரைசலுடன் சிறிது சிறிதாகச் சேர்த்து நன்கு கலக்கினால் 100 லிட்டர் (1%) போர்டோ கலவை தயாராகிவிடும். (கலவையைத் தயாரிக்க பிளாஸ்டிக் அல்லது மண் பாத்திரங்களை மட்டுமே பயன் படுத்த வேண்டும்).

கலவையின் தன்மை பரிசோதனை : தயாரித்த கலவையில் கத்தி அல்லது இரும்புத் துண்டை நனைத்துப் பார்க்க வேண்டும். அதில் செப்புப் படிவம் (செம்பழுப்பு நிறம்) படிந்தால், அமிலத்தன்மையைச் சரிசெய்ய மேலும் சிறிது சுண்ணாம்புக் கரைசல் சேர்க்க வேண்டும்.

வேர்ப்பகுதியில் ஊற்றும் முறை : நோய் தாக்கிய தென்னை மரத்தின் அடிப்பகுதியைச் சுற்றி சுமார் 1.5 முதல் 2 மீட்டர் சுற்றளவில் வட்டப் பாத்தி அமைக்க வேண்டும். தயாரித்து வைத்துள்ள 1% போர்டோ கலவையில், ஒரு மரத்திற்கு 40 லிட்டர் வீதம் வேர்ப்பகுதி முழுவதும் நன்கு நனையுமாறு ஊற்ற வேண்டும்.

கால அளவு : நோயின் தீவிரத்தைப் பொறுத்து ஆண்டுக்கு 3 முறை (அதாவது 3 மாத இடைவெளியில்) இவ்வாறு ஊற்றுவதன் மூலம் பூஞ்சையின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தலாம். நோய் தாக்கிய மரத்தைச் சுற்றியுள்ள ஆரோக்கியமான மரங்களுக்கும் தடுப்பு நடவடிக்கையாக இதனை ஊற்ற வேண்டும்.

கிசான் சாரதி செயலி குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்

ஈரோடு, நவ.23

ஈரோடு மாவட்டம், கொளத்துப்பாளையம் கிராமத்தில் கரூர் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதியாண்டு வேளாண்மை மாணவிகள் ஐஸ்வர்யா ஸ்ரீ கோ, அபர்ணா ச, பவதாரணி இ, புவனேஸ்வரி லெ, புவனேஸ்வரி பொ, பூமிகா வை ச, கோடீ்வரா த, தீபவைசாலி க, தர்ஷினி பிரியா ஜெ



ஆகியோர், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் கீழ் கிசான் சாரதி மொபைல் செயலி குறித்த செயல்விளக்க நிகழ்ச்சியை நடத்தினர்.

இந்நிகழ்ச்சியில் கிசான் சாரதி செயலியின் பயன்பாடுகள், சிறப்பம்சங்கள் மற்றும் அதன் மூலம் வேளாண் வல்லுநர்களைத் தொடர்புகொண்டு விவசாய ஆலோசனைகளைப் பெறும் முறைகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கினர். மேலும், விவசாயிகளைக் கொண்டே செயலியில் வழங்கப்பட்டுள்ள தொலைபேசி எண்ணின் மூலம் வேளாண் வல்லுநர்களைத் தொடர்புகொள்ளச் செய்து செயல்விளக்கம் அளித்தனர். இதன் மூலம் விவசாயிகள் வல்லுநர் களுடன் நேரடியாக உரையாடி வேளாண் ஆலோசனைகளைப் பெறும் அனுபவத்தைப் பெற்றனர். எதிர்காலத்தில் விவசாயம் தொடர்பான சந்தேகங்கள் மற்றும் ஆலோசனைகளைப் பெற இச்செயலியைப் பயன்படுத்துவதாக விவசாயிகள் ஆர்வம் தெரிவித்தனர்.

விவசாயிகளுக்கு டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் மூலம் எளிதாகவும் விரைவாகவும் வேளாண் ஆலோசனைகள் கிடைக்கச் செய்வதே இந்நிகழ்ச்சியின் முக்கிய நோக்கமாக அமைந்தது.

பங்கேற்பு கிராமப்புற மதிப்பீட்டுத் திட்டம்

(Participatory Rural Appraisal – PRA)

திருப்பத்தூர், நவ.23

பாலாறு வேளாண்மைக் கல்லூரி மாணவர்கள் சார்பாக 19.11.26 அன்று திருப்பத்தூர் மாவட்டம், இராச்சமங்கலம் கிராமத்தில் பங்கேற்பு கிராமப்புற மதிப்பீட்டுத் திட்டம் (PRA) நடைபெற்றது.



இத்திட்டத்தின் மூலம் கிராம மக்களுடன் கலந்துரையாடி, அவர்களின் வாழ்வாதாரம், விவசாய முறைகள், நீர்வளங்கள், கல்வி, சுகாதாரம், சாலை வசதிகள் மற்றும் அடிப்படைத் தேவைகள் குறித்து அறிந்து கொண்டோம்.

மேலும், கிராம வரைபடம் தயாரித்தல், வளங்களைக் கண்டறிதல் மற்றும் கிராமத்தின் முக்கியப் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளுதல் போன்ற செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்நிகழ்ச்சியின் மூலம் கிராம மக்களின் பங்கேற்புடன் கிராம வளர்ச்சிக்கான தேவைகளை மதிப்பிடுவது குறித்து மாணவர்கள் நடைமுறை அறிவைப் பெற்றனர்.